(48) கிரேக்க, உரோம நாகரிகம் I — இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்:

* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* பகுதி I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.
* பகுதி II இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குரிய விடைகளை, தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* இவ்வினாத்தாளுக்கான விடைகள் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

## பகுதி I - கிரேக்க, உரோம வரலாறு

1. மரபுக் கதைகளுக்கேற்ப எதென்ஸ் தாபிக்கப்பட்டது,
   (1) பெலொப்ஸ் (Pelops) இனால் ஆகும். (2) கெக்ரொப்ஸ் (Cecrops) இனால் ஆகும்.
   (3) கட்மஸ் (Cadmus) இனால் ஆகும். (4) ஆர்கஸ் (Argus) இனால் ஆகும்.
   (5) டானுஸ் (Danus) இனால் ஆகும். (......)

2. ட்ரோஜன் யுத்தம் தொடர்பான மரபுக்கதை வீரர்களின் செயல்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் **பிழையானது** எது?
   (1) இலியாட் (*Iliad*), ஓடிசி (*Odyssey*) செய்யுள்களில் அவர்களின் வீரச்செயல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
   (2) ஓடிசியஸின் (Odysseus) பத்து வருடப் பயணம் பற்றிய கதை ஓடிசி நூலில் (*Odyssey*) குறிப்பிடப்பட்டுள்ளது.
   (3) ஓடிசியஸ் (Odysseus') மீண்டும் இத்தாகாவுக்கு (Ithaca) வந்தமையும் அவன் பெனலோபியனிடம் (Penelope) பழிதீர்த்தமையும் பற்றிய கதை ஓடிசி (*Odyssey*) நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
   (4) மெனலாயஸ் (Menelaus) மீண்டும் ஸ்பாட்டாவுக்கு (to Sparta) வந்தமை அவனின் இராசதானியை புனருத்ததாரணம் செய்தமை என்பன பற்றிய கதைகள் இலியாட் (*Iliad*) நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
   (5) ட்ரோஜன்களுக்கு எதிராக கிரேக்கர்கள் ஒலிம்பியன்களின் (olympians) ஆதரவுடன் போர் செய்த முறை பற்றிய கதைகள் இலியாட் (*Iliad*) நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (......)

3. பின்வருவனவற்றுள் ட்ரகோ (Draco) தனது சட்டத் தொகுப்பினை முன்வைப்பதற்குக் காரணமான அதென்ஸில் (in Athens) நிலவிய சூழ்நிலைகள் பற்றிய **பிழையான** கூற்று எது?
   (1) அதென்ஸில் (in Athens) எழுதப்பட்ட சட்டத் தொகுப்பு இருக்கவில்லை
   (2) அதீனியன் நீதிபதிகளின் தீர்மானங்களை கட்டுப்படுத்தும் முறை அதென்ஸில் இருக்கவில்லை
   (3) சாதாரணப் பொதுமக்கள் அதென்ஸின் சட்டத்தைக் கட்டுப்படுத்தினர்.
   (4) பொதுமக்களுக்கு அதென்ஸ் அரசில் நீதி மறுக்கப்பட்டது.
   (5) கொடூரமான நீதிபதிகள் அதென்ஸ் நகரில் சாதாரண மக்களை அடக்கி ஒடுக்கினர். (......)

4. பின்வரும் அட்டவணையில் **முதலாம் நிரலில்** அதீனியன் வகுப்புகள் அவர்களின் செல்வத்துக்கேற்ப பிரிக்கப்பட்டிருப்பதையும் **இரண்டாம் நிரலில்** அவற்றின் கருத்துகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் |
|---|---|
| பென்டகொசியோமெட்மினி *Pentacosiomedimni* | A – இருநூறு படி அளவு சோளம் உற்பத்தி செய்யும் காணி உரிமையாளர் |
| ஹிப்பெஸ் *Hippes* | B – ஐந்நூறு படி அளவு சோளம் உற்பத்தி செய்யும் காணி உரிமையாளர் |
| சியுகிடாய் *Zeugitae* | C – தமக்கென காணி இருந்தும் அரசியல் உரிமையற்ற விவசாயிகள் |
| தேடெஸ் *Thetes* | D – முந்நூறு படி அளவுக்கு அதிகமாகவும் ஐந்நூறு படி அளவுக்கு குறைவாகவும் சோளம் உற்பத்தி செய்யும் காணி உரிமையாளர் |

முதலாம் நிரலில் உள்ள அதீனியன் வகுப்புகள் இரண்டாம் நிரலில் உள்ள கருத்துடன் சரியாகப் பொருந்தும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C, B, D (2) B, C, A, D (3) B, D, A, C (4) C, B, A, D (5) D, B, C, A (......)

[ 11 වැනි පිටුව බලන්න/பக். 11 ஐப் பார்க்க/See page eleven

- பின்வரும் கூற்றுகளை வாசித்து **5 ஆம்** வினாவுக்கு விடை தருக.
  - A - அவர் ஆர்கன்ஸ்மாரை (Archons) நியமிப்பதில் செல்வாக்குச் செலுத்தினார்.
  - B - அவர் வெற்றுக் காணிகளைப் பிரித்து கட்டாயத் தேவையுள்ளவர்களுக்கு வழங்கினார்.
  - C - அவர் மலைவாசிகளுக்கான புதிய வகுப்பொன்றை (Diakrioi) ஒழுங்கமைத்தார்.

**5.** பின்வருவோருள் மேலுள்ள A, B, C எனக் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியவர் யார்?
(1) சைலோன் (Cylon)
(2) பெஸிஸ்ட்ராட்ஸ் (Peisistratus)
(3) ஹிப்பார்கஸ் (Hipparchus)
(4) ஹிப்பியாஸ் (Hippias)
(5) அரிஸ்ரியோன் (Aristeion) (……)

**6.** பின்வருவனவற்றுள் மெஸினியன் (Messenian) போர்களின் விளைவினை மிக நன்றாகக் குறிப்பிடும் கூற்று எது?
(1) நியோட்மொடெஸ் (*neodamodes*) எனும் பெயரில் சுதந்திரமடைந்தவர்களின் வகுப்பு ஒன்று தோன்றுதல்.
(2) சிறப்புரிமைகள் பெற்றிருந்த வகுப்பினரின் ஆதிக்கம் மிகவும் பலவீனமடைந்தது.
(3) ஹொப்லைற் (hoplite) போர் உபாயங்களின் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்டது.
(4) அரிஸ்டோமினிஸ், மெஸினீயன்களின் (Messenians) மரபுக்கதை வீரர் ஆகினார்.
(5) ஸ்பார்டன்களின் காணிப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டது. (……)

- கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து **7** ஆம் வினாவுக்கு விடை எழுதுக.

A i - மெலியான் கிரேக்க (Malian Greek) இனத்தவரான எபியல்டெஸ் (Ephialtes) கிரீஸினை காட்டிக் கொடுத்தவர் எனக் குறிப்பிடப்பட்டார்.

ii - ஸ்பார்ட்டன்மார் (Spartans), தீபன்மார் (Thebans), தெஸ்பியன்மார் (Thespians) தங்கியிருக்கும்போது ஏனைய கிரேக்கர்கள் தென்பகுதிக்கு வெளியேறினர்.

B i - அக்ரோபொலிஸ் வீழ்ச்சியடைந்த பின்னர் கிரேக்க ஜெனரல்மார் போர் ஆலோசனைச்சபை நடாத்தி கோரிந்தியானின் இஸ்த்மஸ (Isthmus of Corinth) மீது பின்வாங்கத் தீர்மானித்தனர்.

ii - கிரேக்கர்கள் இரவில் கப்பலில் பயணிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் அதைத் தடுப்பதினால் பாரிய வெற்றி கிடைக்குமெனவும் சிசினஸ் (Sicinnus) என்னும் அடிமை சர்க்சீசிடம் (Xerxes) அறிவித்தான்.

C i - பொசானியாஸ (Pausanias) வழி நடாத்திய ஒன்றிணைந்த கிரேக்க இராணுவம் மார்டோனியஸ் (Mardonius) இயக்கிய பராசீக இராணுவத்தை தோற்கடித்தது.

ii - இந்தப் போர் பாரசீகர்களின் கிரேக்க ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்த முக்கிய தரைப்போர்களில் ஒன்றாகும்.

**7.** தர்மொபிலே (Thermopylae), ஸலாமிஸ் (Salamis), பிளெரயா (Plataea) எனும் போர்களை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடும் தெரிவு எது?
(1) A, B, C (2) B, A, C (3) B, C, A (4) C, A, B (5) C, B, A (……)

**8.** பின்வரும் கூற்றுகளில் மரதனில் (Marathon) மில்டியாட்ஸ் (Miltiades) மற்றும் கிரேக்கர்கள் பயன்படுத்திய உபாயம் பற்றிக் <u>குறிப்பிடாதது</u> எது?
(1) அவர் தமது குதிரைப்படைகளை பாரசீகர்களை வெற்றி கொள்ளப் பயன்படுத்தினார்.
(2) பாரசீகர்களை ஏமாற்றுவதற்காக அவர் தமது படைகளின் மத்தியில் பலவீனமடையச் செய்தார்.
(3) பெலென்கஸ் உருவாக்கம் (Phalanx formation) எனப்படும் போர் உத்தியை அதிகம் பயன்படுத்தினார்.
(4) இரண்டு மலைகளுக்கு இடையிலான பிரதேசத்தில் அவர்கள் போரிட்டனர்.
(5) அவர்கள் உயர்தரமான இராணுவ உபாயங்களையும் ஆயுதங்களையும் பயன்படுத்தினர். (……)

**9.** சிமொன் (Cimon) கி.மு. 461 இல் வெளியேற்றப்பட்டமைக்கான காரணம்,
(1) டிலோஸ் மண்டலத்தை (Confenderacy of Delos) தாபித்ததினாலாகும்.
(2) ஸ்பாட்டன்மார்களுடன் (Spartans) சிறந்த தொடர்புகளைப் பேணியமையாலாகும்.
(3) அதென்ஸில் (in Athens) சனநாயக சீர்திருத்தங்களை எதிர்த்தமையாலாகும்.
(4) நேர்மையான அரசியல் தலைவராக அவருக்கு இருந்த புகழை இழந்தமையாலாகும்.
(5) மரபுவழி அரசியல்வாதியாக இருந்தமையாலாகும். (……)

[ 12 වැනි පිටුව බලන්න/பக். 12 ஐப் பார்க்க/See page twelve

000994

0207000028011079 4

● பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொண்டு **10** ஆம் **11** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - பெரிக்கிளிஸினால் (Pericles) கி.மு. 449 இல் பன்ஹெலிகின் (Panhellenic) மாநாடு கூட்டப்பட்டது.

B - பெரிக்கிளிஸினால் (Pericles) கி.மு. 447 இல் திரேசியான் செர்சொனெசஸில் (Thracian Chersonesus) கிளேருக்கி (cleruchies) ஆகியவற்றில் குடியரசு தாபிக்கப்பட்டது.

C - பெரிக்கிளிஸ் (Pericles), கிரேக்க அரசுகளில் அதீனியான் நாணயங்களை பயன்படுத்த கட்டளையிட்டான்.

D - பெரிக்கிளிஸ் (Pericles), பாரசீகர்களால் அழிக்கப்பட்ட அதீனியன் ஆலயங்களையும் கட்டடங்களையும் புனரமைத்தான்.

**10.** பெரிக்கிளிஸின் ஏகாதிபத்திய கொள்கையின் (Pericles' imperial policy) ஆரம்ப குறியீடுகளைக் காட்டும் இரண்டு கூற்றுகளும் எவை?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம் (5) C உம் D உம் (......)

**11.** மேலே தரப்பட்டுள்ளவற்றுள் பெரிக்கிளிஸின் ஏகாதிபத்திய கொள்கையின் (Pericles' imperial policy) விளைவுகளைக் குறிப்பிடும் இரண்டு கூற்றுகளும் எவை?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம் (5) C உம் D உம் (......)

**12.** சிசிலியன் ஆக்கிரமிப்பில் (Sicilian Expedition) அதென்ஸ் (Athens) அரசு தோல்வியடைந்தமைக்கான காரணம்,
(1) அல்சிபியாட்ஸ் (Alcibiades), ஆக்கிரமிப்பை காட்டிக்கொடுத்தமையாகும்.
(2) அதீனியன்ஸ் (Athenians) பின்வாங்க மறுத்தமையாகும்.
(3) ஸ்பார்டா அரசு அதினிய கப்பல் படையை அழித்தமையாகும்.
(4) சிசிலி அரசு மேலதிகப் படைகளைப் பெற்றுக்கொண்டமையாகும்.
(5) ஸ்பார்ட்டா அரசுக்கு பாரசீக உதவி கிடைத்தமையாகும். (......)

**13.** கிரேக்க நகர அரசுகள் பெலபோனியன் போரில் (Peloponnesian War) ஒன்றுக்கொன்று எதிராகப் போரிட்டன. இப்போரின் நீண்டகால தாக்கம் யாது?
(1) தீப்ஸ் ஸ்பாட்டாவைத் தோற்கடித்தது.
(2) மசிடோனியா கீரிஸை கைப்பற்றியது.
(3) அதென்ஸ் அரசு தங்க யுகமொன்றினுள் பிரவேசித்தது.
(4) ஸ்பார்ட்டா, அதென்ஸைக் கைப்பற்றியது.
(5) ஆர்கோஸ் அரசு மெகாரா அரசைத் தோற்கடித்தது. (......)

**14.** மஸிடோனியாவின் இரண்டாம் பிலிப் (Philip II) அரசனின் போர் நடவடிக்கைகள் பற்றிய பின்வரும் கூற்றுகள், காரணங்கள் என்பன பற்றி வாசித்து அவை பற்றிய சரியான கூற்றுகளைத் தெரிவுசெய்க.

கூற்று - மஸிடோனியாவின் இரண்டாம் பிலிப் (Philip II of Macedonia) மன்னன் அதென்ஸ் மன்னனுக்காக அம்பிபொலிஸ் (Amphipolis) கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தான்.

காரணம் - சுதந்திர அரசான (Athens) பிட்னா (Pydna) அரசை மஸிடோனியாவின் இரண்டாம் பிலிப் மன்னனுக்கு (Philip II of Macedonia) வழங்குவதற்கு அதென்ஸ் இணக்கம் தெரிவித்தது.

(1) கூற்று காரணம் இரண்டும் சரியானவை என்பதுடன் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை.
(2) கூற்று காரணம் இரண்டும் சரியானவை. எனினும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையனவல்ல.
(3) கூற்று மட்டும் சரியானது. காரணம் பிழையானது.
(4) கூற்று பிழையானது. காரணம் சரியானது.
(5) கூற்று காரணம் ஆகிய இரண்டும் பிழையானவை. (......)

**15.** மகா அலெக்சாந்தர் (Alexander the Great) மன்னன்
(1) கி.மு. 336 இல் பவுசானியஸ் (Pausanians) எனும் நபரால் கொலை செய்யப்பட்டார்.
(2) மலைவாழ் குலத்தவரையும் மஸிடோனியன்களையும் ஒன்றிணைத்தார்.
(3) கொரிந்தில் கிரேக்க சம்மேளத்தினால் (Confederacy at Corinth) கிரீஸின் ஜெனரலாக தெரிவு செய்யப்பட்டார்.
(4) ஜெனரல் அட்லஸ்ஸின் (General Attalus) மருமகளான கிளியோபாட்ராவைத் (Cleopatra) திருமணம் செய்தார்.
(5) ஹிபஸ்பிஸ்ராய் (*Hypaspistae*) எனும் பெயருடைய விசேட படையணியையும் அரச பாதுகாப்புப் படையையும் உருவாக்கினார். (......)

[ 13 වැනි පිටුව බලන්න/பக். 13 ஐப் பார்க்க/See page thirteen

000994

**16.** பின்வருவனவற்றுள் இத்தாலியின் நான்கு ஆதி இனத்தவர்கள் பற்றிக் குறிப்பிடுவது எது?
(1) லவீனியன்ஸ் (Lavinians), கெல்ட்ஸ் (Celts), கிரேக்கர் (Greeks), சபாயின்ஸ் (Sabines)
(2) எட்ரஸ்கான்ஸ் (Etruscans), ஸ்பானியர்ட் (Spaniards), சபாயின்ஸ் (Sabines), லட்வியன்ஸ் (Latvians)
(3) அம்பிரயன்ஸ் (Umbrians), கார்த்திஜீனியன்ஸ் (Carthaginians), கொரிந்தியன்ஸ் (Corinthians), கிரேக்கர் (Greeks)
(4) லபிஜீயன்ஸ் (Lapygians), கோல்ஸ் (Gauls), எட்ரஸ்கான்ஸ் (Etruscans), லிகூரியன்ஸ் (Ligurians)
(5) வொல்ஸிகியன்ஸ் (Volscians), லத்தீன்ஸ் (Latins), லவீனியன்ஸ் (Lavinians), சுமேரியன்ஸ் (Summerians) (……)

**17.** பின்வருவனவற்றுள் உரோம அரசுரிமை வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணமான விடயங்கள் இரண்டும் எவை?
A - டார்குவீனியஸ் சுபர்பஸ்ஸின் (Tarquinius Superbus') அடக்குமுறை ஆட்சி
B - சபயின்ஸ் (Sabines) மீதான வன்முறை / துஷ்பிரயோகம்
C - லுக்ரேஷியா மீதான (Lucretia) வன்முறை / துஷ்பிரயோகம்
D - பிளேபெயன்ஸ்மாரின் (Plebeians) எழுச்சி

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்
(4) B உம் D உம் (5) C உம் D உம் (……)

**18.** பின்வரும் அட்டவணையில் முதலாம் நிரலில் அரச அதிகாரிகளும் இரண்டாம் நிரலில் அவர்களுக்கான கடமைகளும் தரப்பட்டுள்ளன.

| அரச அதிகாரி | கடமைகள் |
|---|---|
| கொன்சல் (Consul) | A - உரோமர்களுக்கான சிவில் நீதியை நிர்வகித்தல் |
| பிரயடர் (Praetor) | B - பிளேபெயின்மாரைத் தவறுகளிலிருந்து பாதுகாத்தல் |
| சென்சர் (Censor) | C - பொது விழாக்களை ஒழுங்குபடுத்துதல் |
| குவேஸ்டர் (Quaestor) | D - வருவாய்களைப் பெற்றுக்கொள்ளுதல் |
| ஈடயில் (Aedile) | E - படையினருக்குக் கட்டளை இடுதல் |
| | F - செனற் சபையின் வெற்றிடங்களை நிரப்புதல் |

அரச அதிகாரிகளும் அவர்களின் கடமைகளும் சரியாகப் பொருந்தும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, D, B, E, C (2) B, D, A, F, C (3) C, B, F, A, E (4) D, A, E, C, B (5) E, A, F, D, C (……)

**19.** பின்வருவனவற்றுள் கொமிடியா டிரிபியூட்டாவுக்கு *(Comitia Tributa)* அரசின் உயர் சட்டவாக்க அதிகாரத்தை வழங்கிய சட்டம் எது?
(1) லெக்ஸ் கனுலெய்யா (Lex Canuleia)
(2) லெக்ஸ் ஒகுல்னியா (Lex Ogulnia)
(3) லெக்ஸ் ஹோர்டென்சியா (Lex Hortensia)
(4) வலேரியோ - ஹொரேஷியான் சட்டங்கள் (Valerio-Horatian Laws)
(5) லிசினியான் சட்டங்கள் (Licinian Laws) (……)

- பியூனிக் போர் பற்றிய பின்வரும் கூற்றுகளை வாசித்து **20** தொடக்கம் **22** வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

A - டியூறினை (Turin) ஹனிபால் (Hannibal) கைப்பற்றியமை.
B - சிசிலி (Sicily) உரோம மாகாணம் ஆனமை.
C - நியூமீடியன் அரசன் (King of Numidia) கார்தேஜினை தாக்கியமை.
D - உரோமர்கள், கனனாய் (Cannae) போரில் தோல்வியடைந்தமை.
E - ஹனிபால் உரோமரை மெடௌரஸ் (Metaurus) போரில் தோல்வியுறச் செய்தமை

**20.** மேல்வரும் கூற்றுகளில் முதலாம் பியூனிக் போர்க் (First Punic War) காலத்தில் நிகழ்ந்த சம்பவத்தைக் குறிப்பது எது?
(1) A (2) B (3) C (4) D (5) E (……)

01070000280110794

[ 14 වැනි පිටුව බලන්න/பக். 14 ஐப் பார்க்க/See page fourteen

**21.** மேல்வருவனவற்றுள் இரண்டாம் பியூனிக் போர்க்காலம் (Second Punic War) பற்றிக் குறிப்பிடும் இரண்டு கூற்றுகள் எவை?

(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் C உம்
(4) B உம் E உம் (5) D உம் E உம் (......)

**22.** மேல்வருவனவற்றுள் மூன்றாம் பியூனிக் போரில் (Third Punic War) நிகழ்ந்த சம்பவத்தைக் குறிப்பிடுவது எது?

(1) A (2) B (3) C (4) D (5) E (......)

**23.** பின்வரும் கூற்றுகளில் கிரகய் சகோதரர்களின் (Gracchi brothers') சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய இரண்டு கூற்றுகள் எவை?

A - எவரும் 300 யூகேராவிற்கும் அதிகமான காணியை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.
B - மேலதிக காணிகள் ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
C - செனற் சபையின் இறுதித்தீர்ப்பு தொடர்பாக முறையீடு செய்வதற்கு உரிமை வழங்கினர்.
D - படைவீரர்கள் தமது செலவிலேயே தேவையான ஆயுதங்கள் உபகரணங்களை வைத்திருக்க வேண்டும்.

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்
(4) B உம் D உம் (5) C உம் D உம் (......)

**24.** பின்வருவனவற்றுள் ஜுகுர்தா (Jugurtha) பற்றிய **பிழையான** கூற்று எது?

(1) அவனுக்கு நியூமீடியாவின் முழு இறைமையையும் பெறுவது தேவையாக இருந்தது.
(2) அவன் அட்ஹபாலை (Adherbal) போரில் தோற்கடித்தான்.
(3) அவன் உரோம கொமிஷனர்மாருக்கு இலஞ்சம் வழங்கினான்.
(4) இறுதி வரைக்கும் கட்சிக்காரரான பொக்கஸ் (Bocchus) இடமிருந்து உதவி பெற்றுக்கொண்டான்.
(5) அவன் சாகும் வரைக்கும் இருண்ட நிலவறையில் பட்டினியாக இருந்தான். (......)

**25.** உரோமில் குற்றவாளியின் கழுத்தை நெரித்தல் மூலம் கொலை செய்யும் புதிய முறையை அறிமுகம் செய்தவர்

(1) தைபீரியஸ் கிரக்கஸ் (Tiberius Gracchus) (2) காயஸ் கிரக்கஸ் (Gaius Gracchus)
(3) கேடோ (Cato) (4) மேறியஸ் (Marius)
(5) சுல்லா (Sulla) (......)

**26.** கிளேடியேடஸ்மாரின் கலகம் (Gladiator's revolts) தொடர்பான சரியான இரண்டு கூற்றுகள் எவை?

A - கிளேடியேடஸ்மாரின் எழுச்சி கபுவா (Capua) மூலம் ஆரம்பமானது.
B - பிரபலமான ஸ்பார்டகஸ் கிளேடியேடர் ஸ்பார்ட்டன் ஆவார்.
C - கிரசஸ் (Crassus) இனால் ஸ்பார்டகஸ்ஸின் கிளர்ச்சி முடிவடைந்தது.
D - உயிர் பிழைத்த கிளர்ச்சியாளர் ஜூலியஸ் சீசரினால் (Julius Caesar) கொலை செய்யப்பட்டனர்.

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்
(4) B உம் D உம் (5) C உம் D உம் (......)

**27.** கட்டிலினாவுக்கு மரண தண்டனை விதிக்காது, வாழ்நாள் நீடித்த சிறைத் தண்டனையை முன்மொழிந்தவர் யார்?

(1) கிரசஸ் (Crassus) (2) பொம்பே (Pompey) (3) சீசர் (Caesar)
(4) அந்தனி (Anthony) (5) சிசரோ (Cicero) (......)

**28.** பின்வரும் சம்பவங்கள் நிகழ்ந்த காலப் பகுதியை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடும் விடை எது?

A - சீசர் (Caesar) ரூபிகோனை (Rubicon) தாண்டிச் சென்றமை
B - லூகாவில் (Luca) மாநாடு நடாத்துதல்
C - கிரசஸ் (Crassus), ஜூலியா (Julia) ஆகியோரின் மரணம் சம்பவித்தல்
D - பர்சாலியாவில் (Pharsalia) பொம்பே (Pompey) தோல்வியடைதல்

(1) A, D, B, C (2) B, C, A, D (3) C, A, D, B (4) C, D, B, A (5) D, A, B, C (......)

**29.** பின்வரும் கூற்றுகளில் ஜூலியஸ் சீசரின் (Julius Caesar's) சீர்திருத்தம் **அல்லாதது** எது?

(1) ஜூலியஸ் சீசர் செனற் அங்கத்தவர்களை 800 ஆக அதிகரித்தமை
(2) அவர் கார்தேஜ் (Carthage) கொரிந்த (Corinth) ஆகியவற்றில் குடியரசுகளை தாபித்தார்.
(3) அவர் கோல் (Gaul) பிரதேசத்திலும் ஸ்பானியாவின் (Spain) சில நகரங்களிலும் மக்களுக்கு குடியுரிமை வழங்கினார்.
(4) அவர் வட்டி வீதத்தைக் குறைத்ததன் மூலம் கடன்காரருக்கு நிவாரணம் வழங்கினார்.
(5) அவர் வறியவர்களுக்கு பொதுக்கட்டிடங்கள் கட்டும் பணியில் வேலை வழங்கினார். (......)

[ 15 වැනි පිටුව බලන්න/பக். 15 ஐப் பார்க்க/See page fifteen

**30.** பின்வருவனவற்றுள் ஒகஸ்தஸ் சீசர் (Augustus Caesar) தொடர்பான **பிழையான** கூற்று எது?
(1) அவர் 'அரசன்' எனும் பட்டத்தை ஏற்க மறுத்தார்.
(2) அவர் இம்பெராடொர் *(Imperator)* பதவியைப் பொறுப்பேற்றார்.
(3) செனற் சபையின் தலைமைக்கு தன்னை நியமித்தார்.
(4) அவர் பொன்டிபெக்ஸ் மக்ஸிமஸ் *(Pontifex Maximus)* பதவியை நிராகரித்தார்.
(5) தனது கொள்கையில் பழைமைவாதத்தை பின்பற்றினார். (……)

## பகுதி II - கிரேக்க உரோம இலக்கியம்

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**31.** ஹிசியட் (Hesiod) தனது **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்** (***Works and Days***) என்ற ஆக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சியுஸ் (Zeus) இனால் உருவாக்கப்பட்ட முதல் மற்றும் இறுதியான இனங்கள் / காலங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.

(i) முதல் இனம் / காலம் ……………………………………

(ii) இறுதி இனம் / காலம் ……………………………………

**32.** ஹிசியட் (Hesiod's) இன் **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்** (***Works and Days***) எனும் ஆக்கத்தில்
(i) ஐந்து கிளைகள் உடைய தாவரம் என்பதால் குறிப்பிடப்படுவது எது?

……………………………………

(ii) தனது முதுகில் தனது வீட்டைச் சுமப்பவன் என அழைக்கப்படுபவன் யார்?

……………………………………

**33.** அரிஸ்தோபெனிஸ் (Aristophanes') இன் **வாஸ்ப்ஸ்** (Wasps) நாடகத்தில்
(i) புறொக்கிளியனை (Procleon) அவனது வீட்டினுள் சிறை வைத்தவர் யார்?

……………………………………

(ii) அது ஏன்?

……………………………………

**34.** அரிஸ்தோபனிஸின் (Aristophanes') **வாஸ்ப்ஸ்** (Wasps) நாடகத்தின் ஆரம்பத்தில் சன்தியாஸ் (Xanthias) கண்ட கனவைக் குறிப்பிடுக.

……………………………………

……………………………………

**35.** அரிஸ்தோபனிஸின் (Aristophanes') **வாஸ்ப்ஸ்** நாடகத்தின் ஆரம்பத்தில் புரோக்கிளியோன் (Procleon) குறிப்பிட்ட நோ-மேன் (No-Man) எனும் பதத்தினால் கருதப்படும் கட்டுக்கதை யாது?

……………………………………

……………………………………

**36.** சொபொக்கிளிஸின் (Sophocles') **பிலோக்டிஸ்** (Philoctetes) நாடகத்தில் பிலோக்டியை ட்ரோய்க்கு (Troy) கொண்டு வருவதற்கு அனுப்பப்பட்ட நபர்கள் இருவர் யாவர்?

(i) ……………………………………

(ii) ……………………………………

[16 වැනි පිටුව බලන්න/பக். 16 ஐப் பார்க்க/See page sixteen

**37.** சொபெக்கிளிஸின் (Sophocles') **பிலோக்டிஸ்** நாடகத்தில் நெயொப்டொலம்ஸ்ஸின் (Neoptolemus') கண்டுபிடிப்புக்கேற்ப பிலோக்ட்டீஸ் (***Philoctetes***) லெம்னொஸில் (Lemnos) மேலும் உயிருடன் வாழ்வதாக காட்டப்படும் சான்றுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ....................................................................................................

(ii) ....................................................................................................

**38.** சொபெக்கிளிஸின் (Sophocles') **பிலோக்டிஸ்** நாடகத்தில்

(i) பிலோக்டிஸை (Philoctetes) ட்ரோய் (Troy) இராச்சியத்துக்குப் போகுமாறு கட்டளை இட்டவர் யார்?

....................................................................................................

(ii) அவன் ட்ரோய்க்கு ஏன் செல்லவேண்டும்?

....................................................................................................

**39.** **அல்செஸ்ரிஸ்** (Alcestis) நாடகத்தின் அறிமுகத்தை வெளிப்படுத்துவதற்கு யுரிபிடிஸ் பயன்படுத்திய இரண்டு நாடக பாத்திரங்களைப் பெயரிடுக.

(i) ....................................................................................................

(ii) ....................................................................................................

**40.** யூரிபிடிஸ் (Euripides') இன் **அல்செஸ்ரிஸ்** நாடகத்தில் **அல்செஸ்டிஸ்** (Alcestis) தனது மரணத் தறுவாயில் உள்ளபோது அவளின் கணவனான அட்மிட்டிஸிடம் (Admetus) எதைச் செய்ய வேண்டாமெனக் கேட்டாள்?

....................................................................................................

....................................................................................................

**41.** யூரிபிடிஸ்ஸின் (Euripides') **அல்செஸ்டிஸ்** நாடகத்தில் தனது மனைவியின் மரணத்தினால் வீட்டிலுள்ளோர் துக்கம் அனுட்டிக்கும்போது விருந்தாளி ஒருவரை வீட்டிற்கு அழைத்து உபசரிப்பு வழங்கிய தனது செயல் அடம்ட்ஸ் பெரியானு நகர மக்களின் கோரஸுக்கு எவ்வாறு நியாயமானதெனக் குறிப்பிட்டான்?

....................................................................................................

....................................................................................................

**42.** யூரிபிடிஸ்ஸின் (Euripides') **அல்செஸ்டிஸ்** நாடகத்தின் இறுதியில் ஹெரலிக்ஸ் (Haracles) பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு எனப் பாசாங்கு செய்து அட்மிட்ஸிடம் (Admetus) யாரை அழைத்து வந்தான்?

....................................................................................................

....................................................................................................

**43.** றெறன்ஸ்ஸின் (Terence's) **மதர் இன் லோ** (Mother-in-Law) நாடகத்தின் அறிமுகம் எந்த **மூன்று** கதாபாத்திரங்களின் உரையாடல்களினூடாக கட்டியெழுப்பப்படுகிறது?

(i) ....................................................................................................

(ii) ....................................................................................................

(iii) ....................................................................................................

**44.** றெறன்ஸ்ஸின் (Terence's) **மதர் இன் லோ** நாடகத்தில் பம்பிலஸ் (Pamphilus) தனது மனைவியிடம் அன்பு செலுத்தத் தொடங்குகையில் அவளிடமிருந்து பிரிவதற்கான நிகழ்வுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

....................................................................................................

....................................................................................................

[ 17 වැනි පිටුව බලන්න/பக். 17 ஐப் பார்க்க/See page seventeen

**45.** ரெறன்ஸ்ஸின் (Terence's) **மதர் இன் லோ** நாடகத்தில் மிரினா (Myrrina) வுக்கேற்ப பம்பிலஸ் (Pamphilus') வீட்டை விட்டு வெளியேறுவதற்கு பிலுமினாவைத் (Philumina) தூண்டிய உண்மையான காரணம் யாது?

..................................................................................................................................

..................................................................................................................................

**46.** ரெறன்ஸ்ஸின் (Terence's) **மதர் இன் லோ** நாடகத்தில்

(i) பம்பிலஸ்ஸின் (Pamphilus') அடிமை வேலையாளின் பெயர் என்ன?

..................................................................................................................................

(ii) நாடகத்தின் ஆரம்பத்தில் பம்பிலஸ் (Pamphilus), பிலுமினா (Philumina) இருவரைத் தவிர அவனுக்கு மட்டும் தெரிந்த கதையின் பகுதி யாது?

..................................................................................................................................

**47.** அப்போலியன்ஸ்ஸின் (Apollonius') **த வோயேஜ் ஒப் ஆர்கோ** வில் (*The Voyage of Argo*) கதாநாயகர்கள் கொல்சிஸ் நோக்கி கடற்பயணம் செய்வதற்குத் தயாராகும் வேளை

(i) கப்பலின் நடு ஆசனம் யாருக்கு வழங்கப்பட்டது?

..................................................................................................................................

(ii) அவரின் உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?

..................................................................................................................................

**48.** அப்பொலோனியஸ்ஸின் (Apollonius') **த வொயேஜ் ஒவ் ஆர்கோ** இல் ஆர்கொனைட்மார் கொல்கிஸ் (Colchis) நோக்கிச் சென்ற பயணத்தில்

(i) முதலில் எங்கு தங்கி நின்றனர்?

..................................................................................................................................

(ii) அப்போது தங்கியிராது தொடர்ந்து செல்ல வேண்டுமென ஜேசனிடமும் (Jason) கப்பலில் உள்ளோரிடம் கூறியவர் யார்?

..................................................................................................................................

**49.** அப்போலியனியஸ்ஸின் (Apollonius') **த வொயேஜ் ஒவ் ஆர்கோவில்** அதீனா (Athena), ஹேரா (Hera) ஆகியோர் அப்ரொடயிட் (Aphrodite's) அரண்மனைக்கு வருகை தந்தது ஏன்?

..................................................................................................................................

..................................................................................................................................

**50.** அப்போலியனின் (Apollonius') **த வொயேஜ் ஒவ் ஆர்கோவில்** வீடு நோக்கிச் செல்லும் பயணத்தில் ஜேசனும் (Jason) மீடியாவும் (Medea) சந்திப்பதற்குச் சென்ற மீடியாவின் மாமியாரின் பெயர் என்ன?

..................................................................................................................................

* * *